JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **241/2009** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 9** | Prosecution /Defence / Court | |
| Name | **Nagarajan (SSI)** | Village | |
| Father's Name | **Palaniyappagounder** | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 28.01.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு. மணி அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டதாலும், அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சியம் என்பதாலும் அவருக்காக வழக்கு கோப்பை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.11.2008 ம் தேதி இரவு 22.30 மணிக்கு பெருந்துறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த வந்த ஆனந்தகுமார் நிலைய அலுவலில் இருந்த போது நஞ்சப்ப கவுண்டர் மகன் அருணாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 1083/2008 சட்டப்பிரிவு 454, 380 இதச வின் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரையும் இணைத்து கணம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மேல் விசாரணைக்காக செல்லமுத்து அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடமான தென்றல் நகர் சென்று அன்றையதினம் 23.30 மணிக்கு சாட்சிகள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளை

விசாரித்துள்ளார். இவ்வழக்கில் மேற்படி திரு. செல்லமுத்து ஆய்வாளர் பணி மாறுதலில் சென்று விட்டதால் அதன் பிறகு பெருந்துறை காவல் நிலையத்திற்கு பணி மாறுதலாகி வந்த திரு. மணி காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

2. வழக்கின் சம்பந்தப்பட்ட எதிரிகளை சித்தோடு காவல் நிலைய ஆய்வாளர் திரு. பழனியப்பன் அவர்கள் 22.03.2009 ம் தேதி சித்தோடு காவல் வாகன தணிக்கையில் இருந்த போது பாலு என்கிற பாலுசாமி மற்றும் எதிரிகள் மாரியப்பன் என்கிற ரவி டேனியல், ரகு என்கிற முரளிகுமார் ஆகியோர்களை கைது செய்தும் அவர்களின் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும் அந்த வாக்குமூலத்தின் படி கேரளா மாநிலம் பாலக்காடு கிழக்கஞ்சேரி சென்று முத்து மகன் மணிகண்டன் பெருந்துறை காவல் நிலைய குற்ற எண் 1082/2008, 1083/2008 இந்த இரண்டு வழக்குகளில் களவு போன களவு சொத்துக்களை சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியுள்ளார். மேற்படி களவு சொத்துக்களை படிவம் 91 மூலம் மற்றும் சொத்துக்களுடன் பெருந்துறை காவல் நிலையத்திற்கு 04.04.2009 ம் தேதி அனுப்பி வைத்துள்ளார். அன்றையதினம் பெருந்துறை காவல் நிலைய பொறுப்பில் இருந்த திரு. மணி என்பவர் மேற்படி வழக்கு சொத்து மற்றும் படிவம் 91 மகஜர் ஆகியவற்றை பெற்றும் வழக்கின் சாட்சிகளை விசாரித்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் சாட்சிகள் வழக்கின் வாதியான அருணாச்சலம், கௌரி, குப்புசாமி, கந்தசாமி, செந்தில்மகேஷ், மகாலிங்கம், வி. மோகனசுந்தரம் கிராம நிர்வாக அலுவலர், விஸ்வநாதன் கிராம உதவியாளர் மற்றும் வழக்கின் சாட்சிகளான மகேந்திரன் மற்றும் விவேகானந்தன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் சித்தோடு காவல் நிலைய குற்ற வழக்கில் நீதிமன்ற காவலில் கோவை மத்திய சிறையில் இருந்து வந்ததால் அவர்களை சம்பிரதாய கைது செய்ய வேண்டி உத்தரவிட்டும் 07.04.2009ம் தேதி கோவை மத்திய சிறை சென்று சிறை கண்காணிப்பாளர் முன்பு சம்பிரதாய கைது செய்தும், எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். பின்பு வழக்கின் களவு சொத்துக்களை படிவம்.91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு வழக்கில் புலன் விசாரணை முடித்து 11.04.2009 ம் தேதி சட்டபிரிவு 454, 380 இதச. பிரிவின்படி இறுதி அறிக்கை

தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** முதல் தகவல் அறிக்கை வெற்று தாளில் புகார்தாரரிடம் பெறப்பட்டு பின்னிட்டு நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. புகாரின் இரண்டாவது பக்கத்தில் வாசகத்திற்கும் இப்படிக்கு என்ற வாசகத்திற்கும் இடைவெளி அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. புகாரின் முதல் பக்கத்தில் அல்லது புகாரின் இரண்டாவது பக்கத்தில் புகாரின் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கையெழுத்து கீழ் புகார்தாரர் தேதி குறிப்பிட்டுள்ளார். முதல் தகவல் அறிக்கையின் ஒன்பதாவது காலத்தில் களவு போன சொத்தின் மதிப்பு என்ற இடத்தில் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) காவல் ஆய்வாளர் திரு.மணி அவர்கள் மறுவாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமான கைப்பற்றுதல் மகஜர் ஐந்தாவது காலத்தில் ஒன்று மற்றும் மூன்றாவது அயிட்டங்கள் வேறு மையில் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஐந்தாவது காலத்தில் அடித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேறுவேறு சமயத்தில் செய்ததால் தான் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல. யாரிடமிருந்து பொருட்கள் கைப்பற்றபட்டதோ அவர்களுடைய கையெழுத்து கைப்பற்றுதல் மகஜரில் இல்லை என்றால் சரிதான். படிவம் 91ல் 4வது அயிட்டம் எழுதப்பட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் அவருடைய உதவியாளர் எவ்வாறு வரவழைக்கப்பட்டார்கள் என்ற விவரம் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரியல்ல.

3. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை. முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. கைப்பற்றுதல் மகஜர், பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து சட்டவிரோதமாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மீது எந்த குற்றம் இல்லை என்றாலும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை